2018 ஜூன் 13]

முற்பகல் 10—45

அந்த அடிப்படையில், அந்த நிறுவனத்தில் வேலைவாய்ப்பு அளிப்பதற்கான வாய்ப்பு, வசதிகளெல்லாம் இருக்கின்றன. நிலம் கொடுத்தவர்களின் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற கேள்வியை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் முன்வைத்துள்ளார். இது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. நிச்சயமாக இதுகுறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, அதை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 186, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

186—

தரம் உயர்த்துதல்

***14251—திரு. பா. நீதிபதி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

உசிலம்பட்டி சட்டமன்றத் தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள, செல்லம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு மிகச் சிறப்பாகச் செயலாற்றி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த மருத்துவமனையில் மேலும் வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று கோரினாலும், அதற்குரிய ஆய்வுகளைச் செய்து, அந்த வசதிகள் செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி அவர்கள்.

திரு. பா. நீதிபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்ந்த காலங்களிலே மனிதப் புனிதராக, மனித தெய்வமாக, தமிழகத்தின் வளர்ச்சிக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் தன்னுடைய இன்னுயிரை அர்ப்பணித்து, மறைந்தும், மறையாமலும், இன்றைக்கும் அனைவரது உள்ளத்திலும், இல்லத்திலும் வாழ்ந்துகொண்டிருக்கக்கூடிய கருணைத் தாயை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆசியோடு, அம்மா அவர்களுடைய ஆட்சிக்குத் தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், இந்த ஆட்சிக்கு முழு மனதோடு துணை நின்று, அம்மா அவர்களுடைய ஆட்சியை சிறப்பாக நடத்திக்கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உசிலம்பட்டி தொகுதியின் தலைமையிடமாக விளங்கக்கூடிய இடம் செல்லம்பட்டி ஒன்றியம். அது கிராமப் பகுதிகள் அதிகம் சூழ்ந்த இடம். அங்கே இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாதந்தோறும் 20 முதல் 30 பிரசவங்கள் நடக்கின்றன. அங்குள்ள பெண்கள் பிரசவத்திற்கென தனி அறையுடன்கூடிய படுக்கை வசதி மற்றும் பிரசவத்திற்கென்று தனி அறையுடன்கூடிய ஒரு கட்டடம் தேவை என்று பல முறை அந்தப் பகுதி மக்களும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நீதிபதி, கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள். உங்களுக்கு இன்னொரு கேள்வி கேட்க வாய்ப்பு இருக்கிறது.

திரு. பா. நீதிபதி: அந்தப் பகுதி மக்களுடைய வேண்டுதலின்படி பிரசவ அறையுடன்கூடிய கட்டடம் கட்டித் தருவதற்கும், அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் அமைத்துத் தருவதற்கும், புதிய தரைத் தளம் அமைத்துத் தருவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2018 ஜூன் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செல்லம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்டு சிறப்பாகச் செயலாற்றி வருகிறது. ஒரு மாதத்திற்கு 20—க்கும் மேற்பட்ட பிரசவங்கள் நடைபெறுகின்றன என்று சொல்கின்றார். உண்மையிலே, இந்தியாவிலேயே 70 சதவிகிதம் பிரசவங்கள் அரசு மருத்துவமனைகளில் செயல்படக்கூடிய ஒரே மாநிலம் நம் தமிழ்நாடு. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் கருவுற்ற பெண்களுக்கு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்மூலம் நிதியுதவி வழங்குகின்ற காரணத்தினாலும், பிறந்த குழந்தைகளுக்கு 16 பொருட்கள் கொண்ட அம்மா குழந்தைகள் நல பரிசு பெட்டகத்தை வழங்குகின்ற காரணத்தினாலும் இந்த நிகழ்வுகளெல்லாம் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட தனி* Labour Ward *மற்றும் சுற்றுச் சுவர் ஆகியவை உடனடியாக இந்த நடப்பாண்டிலேயே கட்டித் தருவதற்கு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி அவர்கள்.*

திரு. பா. நீதிபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மதுரை மாவட்டத்தில் இருக்கின்ற 52 ஆரம்ப சுகாதார நிலையங்களை மையமாகக் கொண்டு, அங்கே துணை இயக்குநர் அலுவலகம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், மற்ற நிருவாக வசதிக்காகவும், மக்களின் வசதிக்காகவும் திண்டுக்கல், தூத்துக்குடி போன்ற மாவட்டங்களிலெல்லாம் துணை இயக்குநர் அலுவலகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மதுரையில் இயங்கிக் கொண்டிருக்கின்ற துணை இயக்குநர் அலுவலகத்தையும் இரண்டாகப் பிரித்து, உசிலம்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு துணை இயக்குநர் அலுவலகம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் காலங்களில் இதுகுறித்து ஆய்வு செய்து, தேவை இருப்பின் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

முற்பகல் 10–50

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் எதிர்க்கட்சித் தலைவர், செயல் தலைவர் அண்ணன் தளபதியார் அவர்களை வணங்குகிறேன். பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அனகாபுத்தூர் நகராட்சியில் 400 சதுரடியில் 6 படுக்கைகள் கொண்ட ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. சிறிய அளவில் உள்ளதால் அது போதுமானதாக இல்லை. அது 60,000 மக்கள்தொகை உள்ள பகுதி. அதேபோன்று பொழிச்சலூர் ஊராட்சிப் பகுதியும் கிட்டத்தட்ட 50,000 மக்கள் வசிக்கின்ற பகுதி. அங்கெல்லாம் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் சிறிய அளவில் உள்ளதால் இடம் போதுமானதாக இல்லை. ஆகவே, மக்கள்தொகைக்கேற்ப ஆரம்ப சுகாதார நிலையங்கள் எல்லாம் விரிவுபடுத்தப்பட வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கின்றேன். ஆகவே, எனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அனகாபுத்தூர் நகராட்சி, பொழிச்சலூர் ஊராட்சி ஆரம்ப சுகாதார நிலையங்கள் விரிவுபடுத்தப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற பொழிச்சலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை நேரடியாக இரண்டு முறை ஆய்வு செய்திருக்கின்றேன். பொதுவாக சென்னையைச் சுற்றி இருக்கக்கூடிய புறநகர்ப் பகுதிகளில் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு, தாங்கள் குறிப்பிட்டதுபோல, பெருகிவரக்கூடிய

மக்கள்தொகைக்கேற்ப அரசு முக்கியத்துவம் கொடுத்துவருகிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்த இரண்டு அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் தேவையின் அடிப்படையில் உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.

திரு. கே.எஸ். மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1989 ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்தபொழுது பரமத்திவேலூர், தாலுகாவாக அறிவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. ஆனால் பரமத்திவேலூர் மருத்துவமனை இன்றுவரை தாலுகா மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படவில்லை. தினமும் 600, 700 புறநோயாளிகள் வருகின்ற மருத்துவமனை. அந்த மருத்துவமனை 1936 ஆம் ஆண்டு கட்டப்பட்ட மிகப்பழமையான, சிதிலமடைந்த கட்டடத்தில் இயங்கிவருகிறது. ஆகவே, அந்த மருத்துவமனையைத் தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தவும், அதற்குரிய மருத்துவர்கள், செவிலியர்களை நியமிக்கவும், பழைய கட்டடத்திற்குப் பதிலாக புதிய கட்டடம் கட்டிக் கொடுக்கவும் அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமத்திவேலூர் சட்டமன்ற உறுப்பினர், நாளைவரை காத்திருங்கள். நாளை நல்ல அறிவிப்பு தங்களுக்குக் காத்திருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய கோரிக்கைபடி, நாளைக்கு அத்துறைக்கான மானியம் இருக்கிறது. மாண்புமிகு

உறுப்பினர்கள் கேட்பதற்கெல்லாம் சேர்த்து நாளைக்கு அவர் பதில் சொல்லிவிடுவார். ஆகவே, இன்றைக்கு இந்தக் கேள்வியை இதோடு முடித்துக்கொள்ளலாம்.

வினா வரிசை எண் 187, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

187—

அடிப்படை வசதிகள்

***9383—திரு. ஆர்.எம். சின்னதம்பி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, கீழ்நாடு ஊராட்சி, நாகலூர் பெரியகல்வராயன் மலையில் உள்ள நீர்வீழ்ச்சிக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மறைந்த முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன். கழகத்தினுடைய இணை ஒருங்கிணைப்பாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழகத்தினுடைய ஒருங்கிணைப்பாளர் அருமை அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள் ஆத்தூர் தொகுதி, பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், கீழ்நாடு ஊராட்சி, நாகலூர் பெரியகல்வராயன் மலையில் உள்ள நீர்வீழ்ச்சிப் பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு முன்வருமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளார்கள். தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்றேன்.*

(அ) மற்றும் (ஆ) சேலத்திலிருந்து 85 கிலோ மீட்டர் தொலைவில் நாகலூர் அருவி அமைந்துள்ளது. சேலம்—வாழப்பாடி—தும்பல்—கருப்பந்துறை—பகுடுப்பட்டு—குன்னூர்—நாகலூர் உள்ளடக்கிய